# திருமறை ஆசான்

புதிய ஏற்பாட்டுத் தூய கிறிஸ்தவ மாத இதழ்


| மலர் 5 | ஜனவரி 1992 | இதழ் 1 |
| --- | --- | --- |





வெளியிடுவோர் :

ஈரோடு கிறிஸ்துவின் சபையார்

2, மணல் மேடு வீதி, ஈரோடு-638 002.

நீங்கள் ஈரோட்டில் இருக்க நேர்ந்தால் கீழ்க்கண்ட நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு கர்த்தருடைய பிள்ளைகளோடு சேர்ந்து ஆராதியுங்கள்.

இடம் : 2, மணல்மேடு வீதி, ஈரோடு-638 002

## நாளும் நடப்பும்

ஞாயிறு : காலை 9-30—11-00...காலை ஆராதனை

,, : ,, 11-00—12-00...ஞாயிறு பள்ளி

,, : மாலை 7-15—8-30...மாலை ஆராதனை

செவ்வாய் }
புதன் } : மாலை 7-15—8-30...குடும்ப ஜெபக்கூட்டம்

வியாழன் : மாலை 7-15—8-30...வேதாகம ஆய்வு (இரண்டாம் வியாழன் மாதாந்திர ஜெப ஆராதனை மாலை 5-00 - இரவு 9 மணி

வெள்ளி : மாலை 7-15 - 8-30 குடும்ப ஜெபம்

சனி : மாலை 7-00 9-00...மன்றுட்டு ஜெபம்

## தலைப்புச் செய்திகள்


1. முதல் நூற்றாண்டு கிறிஸ்தவத்தை மீட்டு அமைப்போம், வாரீர்! 1-4
2. தம்மை எவ்வாறு நினைவு கூற வேண்டும் என்று கர்த்தர் விரும்புகிறார்? 5-9
3. பெண்கள் பகுதி 50 - 50 10-12
4. தமிழ் மொழியில் பரிசுத்த வேதாகமம் 13-15
5. நமது வாழ்வின் காலங்கள் 16-18
6. வஞ்சிக்கப்படாதிருங்கள் 19-20
7. வேதாகமம் விடுவிக்கும் எச்சரிக்கைகள் 21-24
8. நீங்கள் கிறிஸ்துவின் சபையில் அங்கம் வகிக்க வேண்டியது அவசியம் என்பதற்கு 10 காரணங்கள் 25-28

# THIRUMARAI AASAAN

Editor
E.Z. SELVANAYAGAM

Honorary Editor
J.C. CHOATE

❋ ❋ ❋

Published by Church of Christ
2, Manalmedu Street, ERODE-638 002, Tamil Nadu, India
Pleading for the restoration of pure New Testament Christianity :

Vol 5. January—1992 Issue 1


ஆசிரியவுரை

## முதல் நூற்றாண்டு கிறிஸ்தவத்தை மீட்டு அமைப்போம், வாரீர்!

*கிறிஸ்தவ அறம் தழைத்து ஓங்க வேண்டும் என்று நல்லெண்ணம் கொண்ட சான்றோர்களே!*

*உங்கள் யாவருக்கும் எங்கள் இனிய புத்தாண்டு வாழ்த்துக்களும், வணக்கங்களும். தேவன் நம் மீது வைத்துள்ள பெரிதான கிருபையின் காரணமாக நாம் மேலும் ஒரு புதிய ஆண்டைக் காணும் வாய்ப்பினை நல்கியிருக்கிறார். தொடர்ந்து இவ்வாண்டு முழுவதும் காத்து வழி நடத்துவார் என்று விசுவாசிப்போமாக!*

படித்த மேதைகள், செல்வச் சீமான்கள், அரசியல் அறிஞர்கள், வேத விற்பன்னர்கள், அரசோச்சுபவர்கள் போன்ற பல்லாயிரக்கணக்கான மக்கள் இவ்வுலகைவிட்டு எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கும் போது, ஒன்றுக்கும் உதவாத குப்பையும், தூசியும் போன்ற நானும், தாங்களும் ஜீவனோடும் பெலத்தோடும் காக்கப்பட்டிருக்கிறோம் என்றால் அதற்கு என்ன பொருள்? நம்முடைய நீதி அவர்களுடைய நீதியைக் காட்டிலும் சிறப்பாக இருந்ததினாலேயா? அல்லது நம்முடைய சாமார்த்தியமும் திறமையுமா? அல்லவே அல்ல. இது அவருடைய சுத்தக் கிருபை. இவ்வாண்டிலாவது கனி கொடுப்பார்களா பார்ப்போம் என்று நமது இரட்சகராகிய இயேசு கிறிஸ்துவின் பரிந்துரைக்குச் செவி சாய்த்து நமக்குக் கொடுக்கப்பட்ட இறுதித் தவணையாகக் கூட இருக்கலாம்.

ஆகவே எனது அருமைச் சகோதரர்களே, சகோதரிகளே, இவ்வாண்டை கர்த்தருடைய சித்தத்துக்கு இசைவாகக் கழிப்பதற்கு நாம் திட்டமிடுவோம். அந்தத் திட்டங்களைச் செயலாக்குவோம். தடம்புரண்டுக் கிடக்கும் சத்திய மார்க்கத்தை மீட்டு அமைக்கும் பணியினைத் தொடர்வோம்.

**கிறிஸ்துவும் அப்போஸ்தலர்களும் ஒற்றுமையை வலியுறுத்தினார்கள்.**

கிறிஸ்தவ மார்க்கத்தின் நாயகரான கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவும், அவர்தம் திருத்தொண்டர்களில் முதன்மையானவருமாகிய அப்போஸ்தலன் பவுல் அடிகளாரும் மற்றும் கிறிஸ்தவ அறத்தில் பற்றும் உறுதிப்பாடும் உள்ள அனைவரும் ஒற்றுமையாக இருக்க வேண்டும் என்று மிகவும் உருக்கத்தோடு வலியுறுத்துகின்றனர். (யோவான் 17:20-23;1 கொரி 1:10-13; ரோமர் 15:5,6)

**ஏன் அப்படி வற்புறுத்தினார்கள்?**

அப்பொழுது தான் பரம தந்தையாகிய தேவன், மாந்த குலத்தை அழிவிலிருந்து மீட்கும் பொருட்டு தம் ஒரே பேறான குமாரனாகிய இயேசு கிறிஸ்துவை விண்ணுலகில் இருந்து இவ்வுலகுக்கு அனுப்பினார்; மற்றபடி இயேசு தானாகவே தன்னை அந்நிலைக்கு உயர்த்திக் கொள்ளவில்லை என உலகமக்கள் ஏற்றுக் கொண்டு நம்புவர் என்று இயேசு தனது நீண்ட ஜெபத்தில் குறிப்பிடுகிறார். (யோவான் 17:21)

**ஆனால் நாம் காண்பது என்ன?**

நமது கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் சரீரம் என்று வர்ணிக்கப்படும் சபை (கொலோ 1:18) பல கூறுகளாகப் பிரிந்து ஒன்றுக்கொன்று இணக்கமில்லாமல் இருப்பதோடு நிற்காமல் முரண்பாடாகவும் செயல்பட்டு நம்மால் ''அஞ்ஞானிகள்'' என்று கருதப்படும் மற்ற சமயத்தவர்கள் நம்முடைய ஒற்றுமையின்மையைச் சுட்டிக்காட்டி இகழும் நிலை ஏற்பட்டிருக்கிறது. இதனால் கிறிஸ்துவும், அப்போஸ்தலர்களும் அஞ்சின காரியங்கள் மெய்ப்பிக்கப்பட்டு வருவதைக் கிறிஸ்தவத்தில் உண்மையான பற்றும் விசுவாசமும் கொண்ட நன்மக்கள் கண்டும் கேட்டும் மனம் புழுங்கி வருந்துகின்றனர். இவைகள் போதாது என்பது போல் நாளொரு மேனியும், பொழுதொரு வண்ணமுமாக புதிய, புதிய கூட்டங்களும், குழுமங்களும் மழைக்காலத்து 'காளான்'களைப் போல முளைத்து, தங்களுக்குச் சாதகமான சில வசனங்களைப் பொறுக்கி

யெடுத்துக் கொண்டு உறுதியில்லாத ஆத்துமாக்களைத் தந்திரமாய் வசப்படுத்தித் தாங்களே கேட்டுக்கு அடிமைகளாக இருந்தும், பிறருக்குச் சுயாதீனத்தை வாக்குத்தத்தம் செய்தும், ஆசீர்வாதங்களை வாரி வழங்கியும், நமது இரட்சகரின் உடல் உறுப்புகளைக் கண்ட துண்டமாக வெட்டிக் கூறுபோட்டு ஏலம் விடுகின்றனர்.

சரீர சுகமளிப்பு, எண்ணெய் விற்பனை, மூட நம்பிக்கைகளுக்குத் தீனிபோடும் பில்லி, சூனியம், பிசாசு விரட்டல் போன்ற உளுத்துப் போன மாயாஜால வித்தைகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து விளம்பரப்படுத்தி, இயேசு பெருமானின் தலைசிறந்த போதனைகளையும், சத்தான அருள்நெறிகளையும் பின்னுக்குத் தள்ளி விட்டுக் கிறிஸ்து பெருமான் இவ்வுலகுக்கு வந்த தலையாய நோக்கத்தை (லூக் 19:10) இருட்டடிப்புச் செய்து தங்களை மேன்மைப்படுத்திக் கொண்டு அலைகின்றனர். கிறிஸ்தவ மார்க்கத்தின் ''விடிவெள்ளி'' என்று போற்றப்படும் மார்ட்டின் லூத்தருக்கு முற்பட்ட காலத்தை ''இருண்ட காலம்'' என்று வேத அறிஞர்கள் வர்ணிப்பர். ஆனால் இன்று அதைவிட பயங்கரமான ''பேயாட்சி''க் காலமாக இருக்கிறது என்றால் மிகையாகாது. ''மனுஷகுமாரன் வரும்போது பூமியில் விசுவாசத்தைக் காண்பாரோ'' என்கிற இயேசுவின் ஐயப்பாட்டை உறுதி செய்வது போன்ற செயல்கள் நாளுக்கு நாள் பெருகி வருகின்றன. (லூக் 18:8)

## இந்த அவல நிலை மாற என்ன செய்யலாம்?

மேற்கூறப்பட்டுள்ள கொடுமைகளை முன்னொரு காலத்தில் கண்டும் கேட்டும் மனம் வருந்தின நீதிமானாகிய லோத்தைப் போல் செய்வது அறியாது தவிக்கிற பரிசுத்தவான்கள் அனைவரையும் ஒரு அணியாகத் திரட்டி, கள்ள போதகங்கள் தமிழ் மண்ணில் வேரூன்றித் தழைத்து வளராதபடி தடுத்து நிறுத்த கீழ்க்காணும் வகையில் சில திட்டங்களைத் தீட்டி நிறைவேற்றலாம்.

1. தவறான போதகங்களின் ஊற்றுக் கண்களை அடைத்து, முதலாம் நூற்றாண்டில் நடைமுறையில் இருந்த தூய கிறிஸ்துவத்தை மீட்டு அமைக்கும் வகையில் மாந்த அறிவால் கறைபடாத புதிய ஏற்பாட்டுக் கிறிஸ்தவத்தைப் பறை சாற்றலாம்.

2. பொது விடுமுறை நாட்கள் மற்றும் வாய்ப்பு நேரும் போதெல்லாம் சிந்திக்க விரும்புகிற இளைஞர்கள், மாணவச் செல்வங்கள் ஆகியோரைத் திரட்டி, வேத முகாம்கள் நடத்தி, திருவசனமாகிய களங்கமில்லாத ஞானப்பாலை (1பேது 2:3) புதிய ஏற்பாட்டு உபதேச நெறிகளைக் கற்பிக்கலாம் (அப் 17:11)

3. முக்கியமான நகரங்கள், பேரூர், சிற்றூர்களில் அவ்வப்பொழுது நற்செய்திப் பேருரைகள் நிகழ்த்தி, உண்மைக் கிறிஸ்தவ நெறிகளைப் பரப்பலாம்.

4. முறையான வேதாகமப் பள்ளிகளை நிறுவி, தகுதி, ஆர்வம், விசுவாசம், உள்ள இளைஞர்கள் பிறர் கையை எதிர்பார்த்துக் கொண்டிராமல் வாழ்க்கை நடத்துவதற்கு ஒரு தொழிலையும் கற்றுத் தந்து ''உலகம் எங்கும் போய் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள்'' என்ற இயேசு இரட்சகரின் ''பெரிய கட்டளை''யை நிறைவேற்றலாம்.

5. அவ்வப்போது நடைபெறும் நிகழ்ச்சிகளில் பங்கு கொண்டு அவரவர்களுக்கு தேவன் பகிர்ந்தளித்த திறமைகளை அவருடைய பெயர்ப் பிரஸ்தாபத்திற்கு பயன்படுத்தலாம்.

6. புதிய ஏற்பாட்டு அருள் உரைகளை விளக்கும் நூல்கள், திங்கள், வார இதழ்கள், சிற்றறிக்கைகள் (tracts) ஆகியவைகளில் தங்கள் படைப்புகளை எழுதி வெளியிடலாம்.

திருமறை ஆசான் வாசகர்களே! தன்னார்வத்தோடு தங்கள் தங்கள் மாவட்டங்களிலுள்ள சான்றோர்கள் அனைவரையும் ஒரு அணியில் திரட்டி, சிந்தனையாளர்கள் கருத்தரங்கம், இளைஞர் முகாம், நற்செய்திப் பேருரைகள் ஆகியவைகளை நடத்த முன் வாருங்கள். சாத்தானுக்கு எதிரான இந்தப் போராட்டத்தில் கர்த்தர் உங்கள் பக்கம் நின்று யுத்தத்தை நடத்துவார், ஆர்வமுள்ளவர்கள் தொடர்பு கொள்ளுங்கள்.

**E.Z. செல்வநாயகம்**

## பெற்றோரின் கடமை

நீ உன் மகனைத் தண்டியாதிருந்தால் அவனை நேசிக்கவில்லை. நீ அவனை நேசித்தால் அவனைத் தண்டித்துத் திருத்துவாய் நீதிமொழிகள் 13:24

உன் மகன் இளவயதுள்ளவனாயிருக்கும் போதே அவனுக்கு ஒழுங்கைக் கற்றுக்கொடு. நீ அப்படி செய்யவில்லை என்றால், அவன் அழிந்து போவதற்குக் காரணமாயிருப்பாய். நீதிமொழிகள் 19:18

பிள்ளையின் மனதில் மூடத்தனம் இருக்கும். சிட்சையின் பிரம்பு அதை அவனை விட்டு அகற்றும். நீதிமொழிகள் 22:15

# தம்மை எவ்வாறு நினைவு கூற வேண்டும் என்று கர்த்தர் விரும்புகிறார்?

சென்ற மாதம் 25ந் தேதி உலகமெல்லாம் ஒரு மாபெரும் விழாவைக் கொண்டாடி மகிழ்ந்தது. ஆம் மீண்டும் ஒரு முறை கிறிஸ்து ஜெயந்தி. மக்கள் சுற்றமும் நட்பும் சூழ விருந்துண்டு, ஒருவருக்கொருவர் பரிசுகள் வழங்கி வீட்டை அலங்கரித்து, ஒளி உமிழும் மின் விளக்குகள் போட்டு வசதியுள்ளவர்கள் கிறிஸ்துமஸ் மரம் நாட்டி இன்னும் ஏதேதோ வேடிக்கைகள் செய்து தங்கள் மனதைக் களிப்பில் குளிப்பாட்டி மகிழ்ந்தனர். அதை நினைக்கும் போது நமக்கெல்லாம் பெருமிதமாக இருக்கிறது. இல்லையா? பின்னே இருக்காதா? மற்ற சமயத்தவர்கள் அவரவர்களுடைய பண்டிகையை கோலாகலமாகக் கொண்டாடும்போது நமக்கு என்று ஒரு பண்டிகை வேண்டாமோ? அதுவும் அரசாங்கமே அதை அங்கீகரித்து விடுமுறை விட்டிருக்கும்போது உண்மையிலேயே ஒவ்வொரு கிறிஸ்தவனும் மகிழ்ச்சிக் கூத்தாடி அரசாங்கம் விடுமுறை விட்டது நியாயந்தான் என்பதை உணர்த்த வேண்டாமா? இதில் இரண்டுவித அபிப்பிராயமே கூடாது என்கின்றனர். ஆனால் ஒரு கேள்வி. இந்த மாபெரும் விழாவைப்பற்றி பரிசுத்த வேதாகமத்தில் ஏதாவது, எங்கேயாவது குறிப்புகள் இருக்கிறதா? என்ற கேள்வி வாயில் இருக்கும்போதே ஒருவர் சுடச்சுட ''இயேசு பிறந்தார் என்பது உண்மைதானே'' என்று பண்டிகை கொண்டாடுவதை நியாயப்படுத்துகிறார். அனைத்து உலகமும் ஒப்புக்கொண்டிருக்கிற ஒரு மாபெரும் உண்மையை நாம் மறுக்கவில்லை. பின்னே என்ன ஐயா, வாதம் வேண்டிக்கிடக்கிறது? என்று கேட்பீர்கள். நம்முடைய கேள்வி இயேசு பிறந்தாரா இல்லையா? என்பது பற்றியில்லை. கர்த்தர் இன்ன நாளில் பிறந்தார் என்று பரிசுத்த வேதாகமம் எங்கேயாவது கூறுகிறதா என்பதுதான். அதுமட்டுமல்ல ஆதித்திருச்சபையோ அப்போஸ்தலர்களோ இந்த மாபெரும் விழாவைக் கொண்டாடினார்கள் என்பதற்கு வேதாகமத்தில் ஆதாரம் இல்லை. அப்படியானால் இந்தப் பண்டிகை எங்கிருந்து வந்தது? நிச்சயமாக மனிதர்களால் பிற்காலத்தில் இது புகுத்தப்பட்டது. அதை உட்புகுத்தியவர்கள் அவரைக் கரைப்படுத்தும் நோக்கத்தோடுகூட செய்திருக்கலாம். ஆனால் அது கர்த்தருடைய அங்கீகாரம் பெற்றதல்ல என்பது கவனிக்கத்தக்கது.

மக்கள் இந்தப் பண்டிகையைக் கொண்டாடி மகிழ வேண்டும் என்பது தேவயத்தனமாக இருந்திருந்தால் அதைக்குறித்து பரிசுத்த

வேதகமத்தில் தேவ ஆவியானவர் வெளிப்படுத்தியிருக்கமாட்டாரா என்று யோசித்துப் பாருங்கள். பழைய ஏற்பாட்டுப் பண்டிகைகள் பலவற்றைக் குறித்து திட்டமான குறிப்புகள், கொண்டாட வேண்டிய காலம், முறை இவைகள் கொடுக்கப்பட்டிருக்கிறதே. உலகமெல்லாம் கொண்டாடப்படும் கிறிஸ்துமஸ் பண்டிகை பற்றி வேதாகமத்தில் சொல்லப்படவில்லையாதலால், கர்த்தர் அதை விரும்பியிருக்கமட்டார் என்று எடுத்துக் கொள்ளலாமா? ஏதோ ஒரு காலகட்டத்தில் மனிதர்களாகப் பார்த்து ஒரு நாளைப் பிரத்தியேகப் படுத்தி கிறிஸ்துவின் பிறப்பைக் கொண்டாட மேற்கொண்ட முயற்சியே இது என்று தோன்றுகிறது. ஆனால் அநேகர் வேதாகமம் இதைப்பற்றி ஒன்றும் சொல்லவில்லை என்பதால், அதைச் செய்வது தவறு என்று கூறிவிட முடியாது; கிறிஸ்துவை அறியாத அஞ்ஞானி களுக்கு இயேசு கிறிஸ்துவை அறிமுகம் செய்வதற்கு மீண்டும் ஒரு அரிய வாய்ப்பு இதன் மூலமாக உண்டாகிறபடியால் அதை தேவன் அங்கீகாரம்பண்ணுவார் என்பதில்சந்தேகமில்லை என்று வாதிடலாம் அது கேட்பதற்கு நன்றாகவும் நியாயமாகவும்கூடத் தோன்றுகிறது. சவுல் அரசனும் அப்படி நினைத்துக் கொண்டுதான் செயல்பட்டான். ஆனால் தேவன் அதை அங்கீகரிக்காதது மட்டுமல்ல, வன்மையாகக் கண்டித்து அவனை இராஜாவாக இராதபடி தள்ளிப் போட்டார். (1 சாமு 15:1-23).

இங்கே நம்முடைய கேள்வி என்னவெனில், தம்மை நினைவு கூறுகிறவர்கள் எவ்வாறு நினைவு கூறவேண்டும் என்று கர்த்தர் விரும்புகிறார் என்பதே. இதைக்குறித்து வேதாகமத்தில் ஏதாவது சொல்லப்பட்டிருக்கிறதா? அவருடைய அதிகாரத்தால் இது செய்யப்படுவதால் நிச்சயமாக அவர் இதைப்பற்றி சொல்லியிருப்பார் என்று நம்பலாம். நிச்சயமாக பரிசுத்த வேதாகமம் இயேசுவின் பிறப்பைப் பற்றிச் சொல்லியிருக்கிறது. ஆனால் எந்த மாதம் எந்த நாள் என்று சொல்லவில்லை. இவ்வளவு பெரிய விழா எடுத்துக் கொண்டிருப்பவர்கள் எந்த ஆதாரத்தைக் கொண்டு செய்கிறார்கள் என்று அவர்களைத்தான் கேட்கவேண்டும். சொல்லப்போனால் பிறப்பு என்பது மிகச் சாதாரண நிகழ்ச்சிதான். இன்றைக்கு உலகில் 500கோடி மக்களுக்கு மேல் இருக்கிறார்கள் ஆண்டு தோறும் லட்சக்கணக்கான பேர் பிறந்து கொண்டுதான் இருக்கிறார்கள். ஆனால் பரிசுத்த வேதாகமம் அவருடைய மரணம் அடக்கம், உயிர்த்தெழுதலுக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்திருக்கிறது. ஆதிக் கிறிஸ்தவர்கள் அந்தச் சம்பவங்களை நினைவு கூறும் வகையில் வாரத்தின் முதல் நாள் தோறும் சபையாகக் கூடி, அப்பம் பிட்டு, அவரை ஆராதித்திருக்கிறார்கள். (அப். 20:7). அவர்கள், இயேசு கிறிஸ்து நமக்காக்ப்பட்ட பாடுகளையும், அவரு-

டைய சரீரம் பிட்கப்பட்டதையும் சிலுவை மரணத்தையும் நினைவு கூற புளிப்பில்லாத அப்பத்தையும், மனுக்குலத்தின் பாவங்களைப் போக்க தம் விலையேறப் பெற்ற குருதியைச் சிந்தினதை நினைவு கூறும் வகையில் திராட்சைப்பழ இரசத்தையும் அருந்துகின்றனர். அதன் மூலமாக நித்திய ஜீவனை அடைய முடியும் என்று நம்பிக்கையுடையவர்களாகவும் இருக்கின்றனர். (மத். 26:26-28 1 கொரி 11:23-29).

அது சரி ஐயா, வருடத்துக்கு ஒருமுறை கிறிஸ்து பிறந்ததைக் கொண்டாடி மகிழக் கூடாதா? என்கிறார் ஒரு பண்டிகைக் கிறிஸ்தவர். கர்த்தர் அதை அங்கீகரித்திருந்தாலோ அல்லது ஆதித் திருச்சபை அப்பண்டிகையைக் கொண்டாடியிருந்தாலோ, நாம் தயக்கமின்றி ஒருமுறை என்ன, பலமுறை கூடக் கொண்டாடலாம். ஆனால் அப்படியொன்றும் நமக்கு ஆதாரம் இல்லையே, என்றால், இதில் எல்லாம் என்ன வித்தியாசம் இருக்கிறது என்று எனக்குப் புரியவில்லை, கிறிஸ்து பிறந்தார் என்று ஒத்துக் கொள்கிறீர்கள் அப்படியானால் அதைக் கொண்டாடுவதில் என்ன குற்றம்? என்று சாடுகின்றனர்.

அதாவது கர்த்தர் என்ன விரும்புகிறார் என்பதை அறிந்து அவருக்கு விருப்பமானதைச் செய்வதற்கும், அவரையும், அவருடைய உபதேசத்தையும் புறக்கணித்து விட்டு, நம்முடைய மாமிசமும் மனசும் விரும்புகிறபடி செய்வதற்குமுள்ள வித்தியாசம் தான் அது. அதைப் புரிந்துகொள்ள மீண்டும் 1 சாமு. 15:1-23-ஐ ஜெபத்துடன் வாசிக்கவும். அப்போஸ்தலன் பவுல் அவர் வாழ்ந்த காலத்தில் வாழ்ந்த மக்களுக்கு நாட்களையும், மாதங்களையும், காலங்களையும், வருஷங்களையும் பார்க்கிறீர்களே. ''நான் உங்களுக்காகப் பிரயாசப்பட்டது வீணாய்ப் போயிற்றோ என்று உங்களைக் குறித்துப் பயந்திருக்கிறேன்'' என்று எழுதுகிறார். (கலாத். 4:11) பவுல் கூறுகிற இந்தக் காலத்திய நாட்டுச் சபையார் தற்காலத்தில் கிறிஸ்துமஸ் கொண்டாடி மகிழ வேண்டும் என்று துடிக்கிற அநேக கிறிஸ்தவர்களுக்கு ஒப்பானவர்கள். பவுல்அவர்களுடைய செயலை ஏற்றுக்கொள்ளாததைப் போலவே இன்றைக்கு அவர் உயிரோடிருந்தால் கிறிஸ்துமஸ் கொண்டாடி மகிழ்ந்தவர்களையும் பாராட்டியிருக்க மாட்டார் என்பது திண்ணம்.

உலகம் எல்லாம் ஏற்றுக் கொண்டிருக்கிற ஒரு காரியத்துக்கு எதிரான கருத்தை எப்படிச் சொல்வது என்று பயந்து பயந்து உண்மையை உணர்த்த விரும்பும் என்னையும் என் உடன் ஊழி-

யர்களையும் பார்த்து, ''நீங்கள் கிறிஸ்துவை விசுவாசிக்கிறதில்லை, நீங்கள் அந்திக் கிறிஸ்தவர்கள், கிறிஸ்தவத்துக்கு எதிரிகள் என்று நாக்கூசாமல் திட்டித் தீர்க்கின்றனர். காரணம், மெய்க் கிறிஸ்தவத்துக்குள் பக்தியற்றவர்களாகிய சிலரால் புதிய வழியாய் புகுத்தப்பட்ட கிறிஸ்துமஸைச் கொண்டாட மாட்டோம் என்கிறோமாம்,

நண்பர்களே, உண்மையென்னவெனில் நாங்கள் மெய்யாகவே கிறிஸ்துவை நேசிக்கிறோம். அவருடைய அதிகாரத்தை மதிக்கிறோம். அவருடைய விருப்பப்படி மட்டுமே நடக்க விரும்புகிறோம். ஆராதனையிலாகட்டும், மற்றெந்தக் காரியங்களிலாகட்டும் வேதம் விரும்புவதை மட்டுமே செய்வோம் என்று உறுதியோடு நிற்கிறோம். பெரும்பான்மையான கிறிஸ்தவர்கள் கூட்டத்தோடு கூட்டமாக சேர்ந்து கொண்டு பாரம்பரியங்களையும் மனிதகுலத்தால் ஏற்படுத்தப்பட்ட முறைமைகளையும், சடங்காச் சாரங்களையும், ஏன்? எப்படி, எதற்கு? என்று கேள்வி கேட்காமல் கண்மூடித் தானே பின்பற்றிப் போகிறார்கள், உங்கள் வாழ்க்கையை தேவனுடைய வசனத்தின் அடிப்படையில் அமைத்துக் கொண்டு வாழ உங்களுக்கு விருப்பம் இருந்தால் அவைகளெல்லாம் சரிதானோவென்று பார்த்து நலமானதைப் பிடித்துக்கொள்ளுங்கள்.

உலகமக்களின் கவனத்தை ஈர்ப்பதற்காக நாங்கள் மற்ற கிறிஸ்தவர்களைக் காட்டிலும் வித்தியாசமானவர்கள் என்று காட்டிக்கொள்ள இப்படிக் கூறுகிறோம் என்று நினைத்துவிடாதீர்கள். அல்லது அவ்விதமானபண்டிகைகளைக்கொண்டாடுவதைத் தடுத்து நிறுத்த வேண்டும் என்றும் வாதிடவில்லை, ஆனால் வரலாறு பூர்வமாக நீங்கள் இவைகளை ஆய்வு செய்து, கிறிஸ்துமஸ் பண்டிகையில் தோற்றமும், அது எங்கிருந்து வந்தது என்றும், அதில் செய்யப்படும் ஒவ்வொரு காரியத்துக்கும் என்ன பொருள் என்பதையும் தெரிந்து கொண்டு அவைகளை பரிசுத்த வேதாகமத்தின் வெளிச்சத்தில் பார்த்து கர்த்தரால் அங்கீகரிக்கப்பட்டதா? கர்த்தர்தம்மை நினைவுகூறுகிறவர்கள் எவ்வாறு நினைவு கூற வேண்டும் என்று விரும்புகிறார் என்பதையெல்லாம் கவனித்தீர்களானால் நீங்கள் நிச்சயமாகவே வெட்கப்பட்டு இனிமேல் இதைச் செய்ய மாட்டோம் என்று தீர்மானிப்பீர்கள்.

அப்படிச் சொல்லி நீங்கள் கிறிஸ்துவை கனப்படுத்துவதைத் தடைசெய்யவில்லை. உண்மையான கனத்தைக் கொடுக்கும்படியே மன்றாடுகிறோம், இதைவிட வேறு எதைச் சொல்லி உங்கள் சிந்தனையைத் தூண்டுவது என்று எங்களுக்குத் தெரியவில்லை.

(பிர. 12:10)

*நீங்கள் இவைகளையெல்லாம் சிந்திப்பீர்களோ மாட்டீர்க-களோ, ஆனால் ஒரு கேள்வியை மட்டும் மறந்துவிடாமல் உங்கள் உள்ளத்தில் கேட்டுக் கொண்டேயிருங்கள் ''**தன்னை நினைவு கூறுகிறவர்கள் எவ்வாறு நினைவு கூறவேண்டும் என்று கர்த்தர் விரும்புகிறார்?** நீங்கள் எப்படி நினைவுகூற விரும்பு-கிறீர்கள் என்றல்ல. இதில் மிகப் பெரிய வித்தியாசம் இருக்கிறது. ஆம் சகோதரனே, சகோதரியே மிகப் பெரிய வித்தியாசம் இருக்-கிறது. இவ்வாண்டிலாவது புரிந்து கொள்ள முயற்சிப்பாயா?*

**ஜே.சி. சோட்**

## ஓர் தகப்பனின் அனுபவ ரீதியான அறிவுரை

என் மகனே, என் போதகத்தை மறவாதே ;உன் இருதயம் என் கட்டளைகளைக் காக்கக் கடவது.

அவைகள் உனக்கு நீடித்த நாட்களையும் தீர்க்காயு-சையும் ; சமாதானத்தையும் பெருகப் பண்ணும்.

கிருபையும் சத்தியமும் உன்னை விட்டு விலகாதிருப்ப தாக. நீ அவைகளை உன் கழுத்திலே பூண்டு அவைகளை உன் இருதயமாகிய பலகையில் எழுதிக் கொள்.

அதனாலே தேவனுடைய பார்வையிலும், மனுஷரு-டைய பார்வையிலும், தயையும், நற்புத்தியையும் பெறுவாய்.

உன் சுயபுத்தியின் மேல் சாயாமல், உன் முழு இருதயத்தோடும் கர்த்தர் மேல் நம்பிக்கையாயிருந்து உன் வழிகளிலெல்லாம் அவரை நினைத்துக் கொள் அப்பொழுது அவர் உன் பாதைகளைச் செவ்வைப் படுத்து வார்.

நீ உன்னை ஞானியென்று எண்ணாதே, கர்த்தருக்குப் பயந்து, தீமையை விட்டு விலகு

அது உன் நாபிக்கு ஆரோக்கியமும், உன் எலும்பு களுக்கு ஊனுமாகும்,

உன் பொருளாலும், உன் எல்லா விளைவின் முதற் பலனாலும் கர்த்தரைக் கனம் பண்ணு,

அப்பொழுது உன் களஞ்சியங்கள் பூரணமாய் நிரம்-பும் உன் ஆலைகளில் திராட்சை ரசம் புரண்டோடும்.

என் மகனே, நீ கர்த்தருடைய சிட்சையை அற்பமாக எண்ணாதே, அவர் கடிந்து கொள்ளும்போது சோர்ந்து போகாதே.

தகப்பன் தான் நேசிக்கிற புத்திரனைச் சிட்சிக்கிறது போல், கர்த்தரும் எவனிடத்தில் அன்பு கூறுகிறாரோ அவனைச் சிட்சிக்கிறார். நீதி 3:1-12

# 50 - 50

எனக்குத் தெரிந்த ஒரு இளம்பெண். மிக்க ஆவலோடு திருமணத்தை எதிர்பார்த்து மகிழ்ந்து கொண்டிருந்தாள். நாங்கள் இருவரும் 50-50 என்ற விகிதத்தில் (அதாவது பாதிக்குப் பாதி) காரியங்களை பகிர்ந்து கொண்டு வாழ்க்கையை இன்பமாக நுகர்வோம் என்றுதனது மகிழ்ச்சிக்குரிய காரணத்தை சொன்னாள் அவள் கூறியது ஒரு வகையில் உண்மைதான். மனைவி என்ற முறையில் அவளுடைய பங்கைச் சரிவரச் செய்ய மனதாயிருக்கிறது போலவே அவர்கணவனும் தன்னுடைய பங்கைச் சரிவரச் செய்து திருமணத்தின் பலனைப் பரிபூரணமாக சுவைப்போம் என்று எண்ணினாள்.

கற்பனைத் தேரில் பயணம் செய்து கொண்டிருக்கும் இந்தப் பேதைப் பெண் வாழ்க்கையில் இன்னும் எவ்வளவு கற்றுக் கொள்ள வேண்டியிருக்கிறது என்று நினைத்து என் மனதுக்குள்ளேயே சிரித்துக் கொண்டேன். ''நீ சொல்வது அனேக நேரங்களில் உண்மைதான். ஆனால் சில வேளைகளில் உடல்நலக் குறைவு ஏற்படுகிறது என்று வைத்துக் கொள்வோம் அல்லது ஏதோ மனதுக்கு ஒரு சோர்வு எதிலுமே ஒரு பிடிப்பில்லாமல் சங்கடப்படுகிறாய் என்று வைத்துக் கொள்வோம். அப்படிப்பட்ட நேரத்தில் உன் கணக்கு சரிவருமா? அப்படிப் பட்ட சூழ்நிலையில் நீ எவ்வளவுதான் ஆசைப்பட்டாலும், முயன்றாலும் வெறும் 10 சதவிகிதம் கொடுப்பதே சிரமமாகப் போய் விடுமே ! அந்த நேரம் பார்த்து உன் கணவன் நான் என்னுடைய பங்கான 50 சதவிகிதம் தான் ஒத்துழைப்பேன் என்று அடம் பிடிக்கிறார் என்று வைத்துக் கொள்வோம். துண்டு விழும் நாற்பது சதவிகிதத்தை எவ்வாறு ஈடு செய்வாய் எனக் கேட்டேன்.

ஓ! அதை அப்பப்பார்த்து, சந்தர்ப்பத்துக்கேற்றவாறு ஏதாவது செய்து கொள்ள வேண்டியதுதான் என்று சமாளித்தாள். சகோதரிகளே, திருமணம் என்பது அந்தப் பெண் சொன்னதைப் போல 'நீ பாதி நான் பாதி' என்ற கோஷமல்ல. ஒன்றாக இணைந்துவிட்ட கணவன் - மனைவி என்ற புதிய கூட்டால் கிடைக்கும் ஆற்றலை ஒட்டு மொத்தமாக எடுத்துக் கொண்டு, இருவரும் எந்தெந்த விஷயங்களில் பலஹீனமாக இருக்கிறார்களோ அதை நிறைவு செய்யும் வகையில் அதைப் பயன்படுத்த வேண்டும்.

இன்றைக்கு மனைவிக்கு ஏற்பட்ட துன்பம் அல்லது வியாதி நாளைக்கு கணவனுக்கு ஏற்படலாம் அல்லது இன்றைக்கு கணவனுக்கு ஏற்பட்ட துன்பம் அல்லது வியாதி

நாளைக்கு மனைவிக்கு வரலாம். அந்த மாதிரி சந்தர்ப்பங்களில் பாதிக்கப்பட்டவருக்கு அடுத்தவர் உதவ வேண்டும். திருமணம் என்பது ஒரு குறிப்பிட்ட நன்னாளில் ஆரவாரத்தோடு, உற்றார், உறவினர்கள் புடை சூழ நடந்து முடிந்து விடுகிற திருவிழா அல்ல. ஒரு நல்ல திருமணம் என்பது ஒவ்வொரு நாளும் திட்ட-மிட்டு வாழ வேண்டிய வாழ்க்கை ஒப்பந்தம்.

தனித்தனியாக இருந்த இருவரை ஒன்றாக இணைத்து விடுவதோடு திருமணம் முடிந்து விடுவதில்லை. திருமணம் என்பது ஒருவரையொருவர் புரிந்து கொண்டு நடத்தும் அன்றாடக் கூட்டு வியாபாரம். திருமணத்திற்கு முன்பே ஒருவரையொருவர்கணிசமான அளவு அறிந்து கூட இருக்கலாம். ஆனால் திருமணத்தில் இணைந்த பிறகு 24 மணி நேரமும் ஒன்றாக வாழ்ந்து பழகும்போது ஏற்-படுகின்ற பிரச்சனைகள் வித்தியாசமானது. ஒரு சிறு பிரச்சனை கூட, சில வேளைகளில் விசுவரூபம் எடுத்து வாழ்க்கையில் பெரிய கீறல்களை உண்டாக்கி விடக்கூடும். ஆகையால் பல சந்தர்ப்-பங்களில் ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுத்து வாழ வேண்டிவரும்.

சில நாட்களில் 60-40, 30-70, 90-10 என்ற விகிதத்தில் கூட செயல்பட நேரிடலாம். எந்த சூழ்நிலையிலும் இருவரும் ஒரே சரீரமாக ஒன்றிப்போய் தங்களுடைய தாம்பத்திய வாழ்க்கைக் கப்பல் சேதமடையாதபடி பார்த்துக் கொள்ள வேண்டும். வெற்றி வாழ்க்கை வாழத் திட்டமிட வேண்டும். வெற்றி வாழ்க்கைக்கு இரண்டு முக்கியமான திறவுகோல்கள் உண்டு. முதலாவது ஒருவரை யொருவர் புரிந்து கொள்ள வேண்டும். ஒரு பிரச்சனை உருவா-னால் அதை மூடி மறைக்காமல் மனம் விட்டுக் கொட்டிக் கலந்து-பேசித் தீர்த்துக் கொள்ள வேண்டும். இருவரும் பொறுமையையும் நிதானத்தையும் கடைப்பிடிக்க வேண்டும். ஆத்திரப்படாமல் வார்த்தைகளை அளந்து பேச வேண்டும்.

இருவரும் சிறிது நேரமாவது பொழுது போக்கு நேரம் எடுத்துக் கொள்ள வேண்டும். எப்பொழுதும் வேலை வேலை என்று வெளியில் சுற்றி விட்டு, உங்கள் வரவுக்காக ஏங்கி நிற்கும் மனைவியுடன் இரண்டு வார்த்தை அன்பாக பேசுவதற்குக் கூட முடியாமல் இருக்கக் கூடாது. பெண் இனம் கணவன்மார்களின் அன்பையும், அரவணைப்பையும் அதிகம் எதிர்பார்க்கிறது. உன் 7; 11ல் ''வாரும், என் நேசரே, வயல் வெளியில் போய் கிரா-

மங்களில் தங்குவோம்'' என்ற அழைப்பினுள் பொதிந்து கிடக்கும் உள்ளர்த்தம் உங்களுக்குப் புரிகிறதா?

இரண்டாவது திறவுகோல். ஒருவருக்கொருவர் அனுசரித்துப் போக வேண்டும். நாம் பூரணமாக இருந்தால் நம்முடைய கூட்டாளியும் கூட பூரணமாக இருக்க வேண்டும் என்று எதிர்பார்க்கலாம். தவறு செய்வது மனித இயல்புதானே. ஆகையால் நாள்தோறும் நாம் யாவருமே பேச்சிலும், நடவடிக்கைகளிலும் தவறு இழைக்கக் கூடியவர்களாக இருக்கிறோம், அந்த நேரத்தில் தவறு இழைத்து விட்டாலும், உடனே நம் தவறை உணர்ந்து வருத்தம் தெரிவிக்க வேண்டும் மன்னிக்கும்படி கேட்கவேண்டும். அதே போல் நாமும் மன்னித்து மறந்து விட வேண்டும். இவ்விதமாக நாம் ஞானமாக நடந்து கொண்டால் சமாதானமும் மகிழ்ச்சியுமான குடும்பமாகத் திகழலாம். மற்றவர்களுக்கும் வழிகாட்டியாக இருக்கலாம்.

**பெட்டி பர்ட்டன் சோட்**

## புதிய ஏற்பாட்டின் இரட்சிப்பின் வழி

**நீங்கள் விசுவாசிக்க வேண்டும். எதை?**

தேவனையும் அவருடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்துவையும், (எபி 11:6; யோவான் 3:16; 1 பேதுரு 1:23.)

**நீங்கள் மனந்திரும்ப வேண்டும். யாரிடத்திற்கு?**

தேவனிடத்திற்கு (லூக் 13: 3; அப் 17:30; 31; 2 கொரி 7:10.)

நீங்கள் அறிக்கையிட வேண்டும். எதற்கு?

இருதயத்தில் நீதியுண்டாக. (ரோமர் 10: 9, 10; அப் 8. 37.)

நீங்கள் ஞானஸ்நானம் பெறவேண்டும். ஏன்?

(அ) பாவம் கழுவப்பட. அப் 22: 16; அப் 2: 38

(ஆ) தேவனுடைய பிள்ளையாக மாற. 1யோவான் 2:1, எபே. 1 : 6.

(இ) கிறிஸ்துவை தரித்துக் கொள்ள. கலா 3 : 26, 27.

ஆரம்ப நாட்களில் மேற்கூறியவாறு செய்து தேவன் அருளிய இரட்சிப்பைப் பெற்றிருக்கிறார்கள். இன்றைக்கும் இதுவே வழி, வேறு வழியே இல்லை.

நீங்கள் இரட்சிப்படைய விரும்புகிறீர்களா? மேற்கூறியவற்றை நிறைவேற்றுங்கள்.

தெரிந்து கொள்ளுங்கள்

# தமிழ் மொழியில் பரிசுத்த வேதாகமம்

**1 பர்த்தலமேயு சீகன் பால்கு.**

உலகமெல்லாம் நற்செய்தி பரவ வேண்டும் என்பது கிறிஸ்தவ மார்க்கத்தில் பிராட்டஸ்டண்ட் என்ற பிரிவைச் சேர்ந்த மிஷனரி மார்களின் தணியாத தாகம். இறைவனின் வார்த்தைகளை ஒவ்வொரு மனிதனும் நேரடியாகப் படித்துப் பயன்பெற வேண்டும் - குருமார்கள் சம்பந்தப்பட்டவனுக்கு விளங்காத அந்நிய மொழியில் படிப்பதினாலும், போதிப்பதினாலும் அதிக பயன் கிட்டுவது இல்லை என்பது அவர்கள் வாதம். அதற்கேற்றாற்போல் அந்த நாட்களில் அச்சு இயந்திரமும் கண்டு பிடிக்கப்பட்டு பழக்கத்துக்கு வந்து விட்டபடியால் இப்பணி வேகமாக முடுக்கி விடப் பட்டது.

அக்சுயந்திரத்தின் மூலமாக இந்தியாவிலேயே முதன் முதலில் அச்சடிக்கப்பட்டது' தமிழ் மொழியில் தான் அதுவும் கிறிஸ்துவச் சமய கைப் பிரதிகளும், துண்டுப் பிரசுரங்களும், வேதாகமமும் தான் என்பது தமிழ் கிறிஸ்துவர்களுக்குப் பெருமை தரும் செய்தி. இந்தப் புனிதப் பணியை துவங்கி வைத்தவர் சீகன் பால்கு என்கிற செர்மானியர்.

இவருடைய முழுப் பெயர் பர்த்தலோமேயு சீகன்பால்கு இவர் ஜெர்மனி நாட்டிலுள்ள சாக்சனி என்ற மாநிலத்திலுள்ள புல்சினிட்ஸ் என்ற ஊரில் கி.பி, 1683ல் பிறந்தவர். சுமார் கி.பி. 706ல் அவர் கிறிஸ்தவ சமயத் தொண்டராக தமிழ் நாட்டிலுள்ள தரங்கம்பாடிக்கு வந்து சேர்ந்தார். இவரையும் இவருடைய் கூட்டாளியின் ''ப்ளுச்சோ'' என்பவரையும் நாலாம் பிரடெரிக் என்ற டென்மார்க் நாட்டு அரசர் சமயத் தொண்டு செய்வதற்காக அனுப்பி வைத்தார்.

தமிழகம் வந்து சேர்ந்தவுடனேயே இரண்டே ஆண்டுகளில் விடாமுயற்சியுடன் தமிழை முறையாகக் கற்று பரிசுத்த வேதாகமத்தை மொழியாக்கம் செய்ய தொடங்கி விட்டார். கி.பி, 1714ல் புதிய ஏற்பாடு என்னும் பகுதியை அச்சேற்றி மக்களுக்கு விநியோகமும் செய்து விட்டார். என்னே! இவரது ஆர்வமும் திறமையும்.

இந்தியாவோடு வர்த்தகத் தொடர்பு கொண்ட ஐரோப்பிய நாடுகளான போர்த்துக்கீசியர், டச்சுக்காரர், பிரெஞ்சுக்காரர், ஆங்கிலேயர் ஆகியவர்களோடு ஒப்பிடும்போது டேனிஷ்காரர்கள்

வியாபார ரீதியில் முக்கியமானவர்கள் அல்லர். ஆனால் ஐரோப்பாவில் பன்முக விளைவுகளை ஏற்படுத்திய மாபெரும் சமய சீர்திருத்த இயக்கத்தின் விளைவாகிய புராட்டஸ்டன்ட் சபையை தமிழ் மண்ணில் விதைத்து வேர் கொள்ளச் செய்தது டேனிஷ்காரர்கள் தான் (சீகன்பால்கும், புளுச்சோவும் ஜெர்மானியர்களாக இருந்த போதிலும் அவர்களுக்குப் பொருளாதார ஆதரவு கொடுத்தவர்கள் டேனிஷ்காரர்கள்) கிறிஸ்தவ வேதத்தைத் தமிழில் தந்தும் மற்றும் தமிழ்ப்பணிகள் பல புரிந்து பல்துறை முன்னேற்றங்களுக்கு அடிகோலியது அவர்களால் நிறுவப்பட்ட தரங்கம்பாடி மிஷன் என்ற நிறுவனமே. அதனால் அவர்களுடைய சேவை தமிழ்க் கிறஸ்தவர்களால் என்றென்றும் போற்றப்படும். பதினேழாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் டேனிஷ்காரர்கள், அன்றைக்கு தஞ்சையை ஆண்டு கொண்டிருந்த ரகுநாத நாயக்கர் என்னும் மன்னனிடம் கொஞ்சம் நிலப்பரப்பை வாடகைக்கு வாங்கியிருந்தார்கள். அதில் பொறையார் என்னும் கிராமம் முக்கியமானது, அங்கு தான் தரங்கம்பாடி மிஷனுக்குச் சொந்தமாக ஒரு அச்சகம் நிறுவப்பட்டது.

தமிழ் எழுத்துக்கள் இப்போது இருப்பது போல் அன்று இருக்கவில்லை. சீகன்பால்கு பரிசுத்த வேதாகமத்தைத் தமிழில் கொண்டுவரவேண்டும் என்ற தாகம் உள்ளவராக இருந்தபடியால் பழந்தமிழ் இலக்கியங்களைத் தேடி பல எழுத்துச் சீர்திருத்தங்களைச் செய்து தமிழ் எழுத்துக்களும் நிலையான தன்மை உண்டாகும்படி செய்தார். பல இன்னல்களுக்கு மத்தியிலும், டேனிஷ் வர்த்தகக் கம்பெனி அதிகாரிகள் இடைஞ்சலுக்கு மத்தியிலும் அவர் விடாமுயற்சியுடன் தமது புதிய ஏற்பாட்டு மொழி பெயர்ப்புப் பணியை கி.பி. 1708 ஆம் ஆண்டு அக்டோபர் மாதத்தில் தொடங்கி கி.பி. 1711—ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் முடித்தார். இடைப்பட்ட காலத்தில் சில மாதங்கள் டேனிஷ் வர்த்தக அதிகாரிகளினால் அவர் சிறையில் கழிக்க வேண்டி நேரிட்டது.

மொழிபெயர்ப்பு முடிந்தவுடன் அதை அச்சில் ஏற்றும் பணியில் அவரும் அவரது உடன் மிஷினரியுமான கிரண்ட்லரும் ஈடுபட்டனர். அந்த புதிய ஏற்பாட்டில் நான்கு சுவிசேஷங்களும் அப்பேலஸ்தலருடைய நடபடிகளும் இருந்தன. அதனால் அதை ''அஞ்சு வேத பொஸ்தகம்'' எனப் பெயரிட்டார். மேலும் பழைய ஏற்பாட்டுப் பகுதிகள், பாடல் புத்தகங்கள், துண்டுப் பிரசுரங்கள் ஜெப புஸ்தகங்கள்' தியான நூல்கள் ஆகியவைகளும் அச்சேறின புதிய ஏற்பாடு மிக அழகாக அமைந்திருந்தது.

இந்த மாதிரி வேதத்தை வார்த்தைக்கு வார்த்தை மொழி பெயர்ப்பதையும் ஏழை எளிய மக்களுக்கு நற்செய்தி அறிவிப்பதை

யும் விரும்பாத மக்கள் மொழி பெயர்ப்பைக் குறை கூறிக் கேலி செய்தனர். ஆனால் அப்பொழுது தமிழ் வசன நடை இருந்த நிலையையும் பாமரருக்கும் வேதம் பயன்பட வேண்டும் என்ற அவருடைய தணியாத தாகத்தையும் கணக்கில் எடுத்துக் கொண்டு பார்த்தால் அவைகளைப் பெரிதுபடுத்துவதில் நியாயமில்லை. மேலும் சீகன்பால்கு வேற்று நாட்டவர். தமிழ்மொழி அமைப்புக்குப் பழக்கப்படாதவர். விவிலிய மூல மொழிகளாகிய எபிரேயமும் கிரேக்கமும் முற்றிலும் வேற்று மொழிக்குடும்பங்களைச் சேர்ந்தவை சமயத் தத்துவங்களை மொழி பெயர்ப்பதும் அவ்வளவு எளிதான காரியமல்ல. கதைகள் மற்றும் எளிமையான விஷயங்களை மொழி யாக்கம் செய்யும்போது கிடைக்கிற நடைச்சரளம், கடினமான இறையியல் கருத்துக்களை மொழியாக்கம் செய்யும்போது கிடைக்காது. சத்தியத்துக்கு முக்கியத்துவம் கொடுக்க முனைகிறபோது நடைச்சரளம் பலியாகிவிடும். இந்தக் கண்ணோட்டத்தில்தான் நாம் முதல் புதிய ஏற்பாட்டின் வசன நடையையும் அணுக வேண்டும்.

யார் என்ன நினைத்துக் கொண்டு மிஷனரி மார்களின் சேவையைக் குறை கூறின போதிலும் சீகன் பால்குவின் புதிய ஏற்பாடும், பிற தரங்கம்பாடி அச்சு வெளியீடுகளும் தமிழ்நாட்டில் மகத்தான சமுதாய மாற்றங்களை ஏற்படுத்தும் கருவிகளாக இருந்தன என்பதில் ஐயமில்லை. அதிலும் குறிப்பாக இந்திய நாட்டில் இந்து வேதங்கள் ஒரு குறிப்பிட்ட மேல் சாதியினரின் அதுவும் அச்சாதி ஆண்மக்களின் ஏகபோக உரிமையாக காலாகாலமாக இருந்து வந்திருந்தன. இப்போது உலகப் பெரும் சமயம் ஒன்றின் வேதம் வார்த்தைக்கு வார்த்தை மொழியாக்கம் செய்யப்பட்டு, மேல் குலம் கீழ் குலம் என்ற வேறுபாடின்றி அனைவருக்கும் குறைந்த செலவில் படிக்கக் கிடைக்கிறது என்றால் அது ஒரு புதிய ஒளி உதயமாகி விட்டதாக, நம்பிக்கை யூட்டுவதாக இருந்தது என்பதில் சந்தேகம் இல்லை. மொத்தத்தில் சீகன்பால்கு அவர்களின் வேதத்தைப் பற்றி சில ஐரோப்பிய கல்விமான்களின் கருத்து பாராட்டும்படியாய் இல்லாவிடினும், ஐரோப்பிய வர்த்தகக் கம்பெனிகளுக்கு அவரது நடவடிக்கைகள்பிடிக்காமலிருந்த போதிலும், அவர் தமிழ்நாட்டில் அறிமுகப்படுப்திய சமயமும், மொழி பெயர்த்த வேதமும் ஏழை எளியவர்களின் துயர் துடைக்க வந்த சஞ்சீவியாகப் பயன்பட்டன என்பதற்கு ஆதாரங்கள் உண்டு.

---

*புத்திமதிகளை விரும்புகிறவன் அறிவை விரும்புகிறான்;*
*கடிந்துகொள்ளுதலை வெறுக்கிறவனோ மிருகக்குணமுள்ளவன்.*
*நீதிமொழி 12:1*

---

# நமது வாழ்வின் காலங்கள்

**''சகோதரரே, அதைப் பிடித்துக் கொண்டே-னென்று நான் எண்ணுகிறதில்லை; ஒன்று செய்கிறேன். பின்னானவைகளை மறந்து, முன்னானவைகளை நாடி, கிறிஸ்து இயேசுவுக்குள் தேவன் அழைத்த பரம அழைப்-பின் பந்தயப் பொருளுக்காக இலக்கை நோக்கித் தொ-டருகிறேன்''.** — (பிலிப் 3:13-14)

வெற்றியும் மகிழ்ச்சியுமான வாழ்க்கை நடத்த ஒரு விதியை மேற்கண்ட வசனத்தில் அப்போஸ்தலன் நமக்குத் தருகிறார். **நிகழ்காலத்தில் வாழ்வோம்; கடந்ததை மறப்போம்; எதிர்காலத்தைக் கண்ணோக்கி நடை போடுவோம்.**

வாழ்க்கை மூன்று முக்கிய கால கட்டங்களைக் கொண்ட-தாகும்: **நடந்தது, நடப்பது, நடக்கவிருப்பது** வாழ்வின் இம்மூன்று பகுதிகளில் ஒவ்வொன்றைப் பற்றியும் நாம் எடுத்துள்ள நிலையானது, இவ்வுலகில் நமது நல்வாழ்வையும், அடுத்து வரும் உலகில் நமது நித்திய நல்வாழ்வையும் தீர்மானிக்கப்பெரிதும் உதவுகிறது.

### கடந்த காலம்

வாழ்வின் முதல் அத்தியாயம் **கடந்த காலம்**. மகிழ்ச்சியும் துன்பமும் கலந்த கடந்த காலத்திய எவ்வளவு பெரிய நினைவுக் கிட்டங்கி ஒன்றை நாம் பெற்றிருக்கிறோம். நினைவு அலைகளில் நீந்துவது வெற்றி வாழ்க்கைக்கு அவசியமானதாகும். நமது கடந்த காலத்தை இடையிடையே நினைத்துப் பார்த்து, அக்காலத்திய நல்ல நேரங்களை நமது மனதில் அசைபோடுவது ஒரு நல்ல செயல்' சில சமயங்களில், நாம் அடைந்த வருந்தத்தக்க அனுபவங்களை-யும் நினைவுக்குக் கொண்டுவந்து, மீண்டுமாக அவற்றை எண்ணச் சிறையில் உடனே அடைத்துவிட்டு, நிகழ் காலத்தில் வாழ வந்து விடுவது நல்லது. ஆனால் நாம் மகிழ்ச்சியும் வெற்றியுமான வாழ்க்கை வாழ, கடந்த கால நிகழ்ச்சிகள் சிலவற்றை முற்றிலு-மாக மறந்துவிடுவது சாலச் சிறந்தது. **''பின்னானவைகளை மறந்து, முன்னானவைகளை நாட''** அப்போஸ்தலன் பவுல் கூறுகிறார். (பிலி. 3:13) கடந்த கால தவறுகளை நாம் மறந்துவிட வேண்டும். அத்தவறுகளைத் திருத்த வேண்டிய நடவடிக்கைகளை யெல்லாம் எடுத்த பின்னர், மறதிக்கடலில் அத்தவறுகளை மூழ்-கடித்து விட வேண்டும். இதையே நமது தேவன் செய்கிறார். **''ஏனெனில் நான் அவர்களின் அநியாயங்களைக் கிரு-பையால் மன்னித்து, அவர்கள் பாவங்களையும் அக்கிர-**

**மங்களையும் இனி நினையாமலிருப்பேன்''** (எ.பி 8:12). சரியான முறையில் மன்னிப்பைத் தேடும்போது, இயேசுவின் இரத்தத்தால் கழுவப்படக்கூடாத பெரிய பாவம் எதுவுமில்லை. **''....அவருடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்துவின் இரத்தம் சகல பாவங்களையும் நீக்கி, நம்மைச் சுத்திகரிக்கும்''** (1 யோவான் 1:7). தேவனுடைய மன்னிப்பை நாம் முறையாகத் தேடிப் பெற்றுக் கொண்டபின், கடந்ததை மறந்து நிகழ்காலத்தில் வாழ வேண்டும்.

## நிகழ் காலம்

நமது வாழ்வின் இரண்டாவது அத்தியாயம் **நிகழ் காலம்.** நாம் செய்ய வேண்டிய காரியங்கள் எதுவும் இருப்பின், அவற்றை **இன்றே** செய்ய வேண்டும் நாம் யாரை சேவிப்பதென்பதை இன்றே முடிவெடுக்க வேண்டும். (யோசுவா 24:15) தேவனுக்கு ஊழியஞ் செய்ய நம்மை இன்றே அர்ப்பணித்துக் கொள்ளவேண்டும். (யோவான் 9:4). இன்றே ஒருவரை ஒருவர் உற்சாகப்படுத்தி கிறிஸ்துவ வாழ்க்கையில் நாம் நடப்போம். எதிர்காலத்திற்கு திட்டமிடுவோம்; ஆனாலும் இவ்வுலகில் நமது கடைசி நாள் இன்றே எனக்கருதி செயல்படுவோம். ஒருவேளை அவ்வாறு இருக்கவும் கூடுமல்லவா? (யாக். 4:13,14).

முக்கியத்துவம் வாய்ந்த காரியங்களை வரிசைப்படுத்தி, முந்திச் செய்ய வேண்டியதை முதலில் செய்யப்பழகுவோம். தேவன் நம்மிடமிருந்து எதிர் பார்ப்பவைகளையெல்லாம் செய்ய நமக்கு நேரமிருக்கிறது. ஆனால் அந்நேரம் **இன்றே;** ''...... இதோ இப்பொழுதே அநுக்கிரக காலம், இப்பொழுதே இரட்சணிய நாள்'' (2 கொரி. 6 ; 2). நமது வாழ்வில் தேவன் நமக்கு உறுதியளித்துள்ள காலம் **இப்பொழுது** மட்டுமே, அதற்கு மேல் இல்லை.

## வருங்காலம்

நமது வாழ்க்கையின் கடைசி அத்தியாயம் **வருங்காலம்** நிகழ்காலம் எப்போதும் சீராக இருக்கும் நேரத்தில், கடந்த காலம் தொடர்ந்து நீண்டு கொண்டே போவதும், வருங்காலம் குறுகிக் கொண்டே வருவதும் நாம் கண் கூடாகக் காண்பவை. எதிர்காலத்திற்காக சிறப்பாக திட்டமிடுவோம். காலம் ஓடிக் கொண்டேயிருக்கிறது. இன்று நாம் வாழ்வில் செய்வது அனைத்தும் நல்லவைகளாக இருக்கட்டும். அதுவே நமக்கு நல்லதொரு எதிர்காலத்தை ஏற்படுத்தும் வழி. 'இன்று மட்டுமே நமக்குத் தரப்பட்டுள்ளது' என நினைத்து வாழ்வோம். கிறிஸ்தவன் அல்லாத ஒரு மனிதன், மரணம் சமீபிக்கையில், கிறிஸ்துவை அறிக்கையிடவும் தனது பாவங்கள் மன்னிக்கப்பட ஞானஸ்நானம் பெறவேண்டிய அவசியத்தையும் உணரவேண்டியவனாயிருக்கிறான். (மாற்கு

16 : 16 : மத். 10 : 32, 33; அப். 2 : 38). ஒருவன் கிறிஸ்தவனாக இருக்கையில் இவ்வுலகில் நல்லதோர் வாழ்வையும், மறு உலகில் நித்திய ஜீவனையும் அடையும் வாய்ப்பைப் பெறுகிறான், இவ்வுலக வாழ்வு முடிந்ததும் நித்திய வாழ்வு தொடங்குகிறது.

நிகழ்காலத்தில் வாழ்வோம்; கடந்த காலத்தை மறப்போம்; எதிர் காலத்தை நோக்குவோம். நமக்கு முடிந்த அளவில் ஒவ்வொரு நாளும் நல்லதையே செய்வோம்; மற்ற எல்லா காரியங்களையும் கவனிக்க தேவனிடத்தில் நம்பிக்கையோடு விட்டுவிடுவோம். (மத். 6 : 33)

ஏப். ஹெஸ்டர். தமிழில் : எஸ். எஸ். ராஜன்

## உங்கள் லட்சியம் என்ன?

அருமை நண்பனே! வாழ்வில் உங்கள் இலட்சியம் என்ன? ஒரு உத்தியோகம், ஒரு வாகனம், ஒரு குடும்பம், பணம், ஒரு பட்டம், உயர்ந்த சம்பளம், அல்லது வேறு எது? இவ்வுலகுக்கடுத்த பொருட்களே பலருடைய குறியாக இருக்கின்றன. ஆனால் அவை அவனை இரட்சிக்க மாட்டா. அல்லது திருப்தி, மகிழ்ச்சி, நம்பிக்கை, எதையும் அவை அவனுக்கு தராது. நீ வாழ்ந்த முறைக்குக் கணக்குக் காட்ட தேவன் முன்பு நீ நிற்கும் போது நீ அனுபவித்த மேற்கண்ட உலக காரியங்களுக்கு எவ்வித அர்த்தமும் இல்லாமற் போகும் தேவனுக்காக நீ என்ன செய்தாய் என்பதே கணக்கில் எடுத்துக் கொள்ளப்படும்.

உங்கள் இலட்சியம் உயர்ந்ததாக இருக்கட்டும்; உங்கள் இலக்கு எல்லாவற்றிலும் மேலானதை நாடுவதில் இருக்கட்டும்; நல்லவற்றை நாடி, தேவனை சந்திக்க ஆயத்தப்படுவோம்.

# வஞ்சிக்கப்படாதிருங்கள்

அப்போஸ்தலன் பவுல் காலத்திய சபைக்கு எழுதிய நிருபத்தில், ''மாம்சத்திற்கென்று விதைக்காமல், ஆவிக்கென்று விதைக்கச் சொல்லி'' சகோதரர்களை எச்சரிக்கிறார் (கலா. 6:6-10). 6வது வசனத்தில், உபதேசிக்கிறவர்களுக்கு உதவி செய்யக் கூறுகிறார் பவுல். **மனிதன் எதை விதைக்கிறானோ அதையே அறுப்பான்** என 7வது வசனத்தில் அறிவுறுத்துகிறார். 8 முதல் 10 வசனங்களில், நல்லதையே விதைத்து நல்லதை அறுவடை செய்வதில் தளர்ந்துபோகாதிருக்க உற்சாகப்படுத்துகிறார்.

ஒருவன் விதைப்பதையே அறுப்பான் என்ற உண்மை நிலை சம்பந்தமாக ''மோசம் போகாதீர்கள்'' என அப்போஸ்தலர் பவுல் மூலமாக பரிசுத்த ஆவியானவர் எச்சரிக்கிறார். 'மோசம் போதல்' என்ற செயலின் தொடர்பான சில காரியங்களை நாம் இங்கு கவனிப்போம்.

**1. மோசம் போதல் என்றால் என்ன?**

'மோசம் போதல்' என்ற சொல்லுக்கு, ''திசை திருப்பி விடப்படுவது'' ''தவறுக்குள் தள்ளப்படுவது'' என்று அர்த்தம். ''ஒருவனும் உங்களை வஞ்சிக்காதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள்; ஏனெனில் அநேகர் வந்து, என் நாமத்தைத்தரித்துக் கொண்டு, நானே கிறிஸ்து என்று சொல்லி அநேகரை வஞ்சிப்பார்கள்'' என இயேசு கூறினார். (மத் 24: 4,5). அப்போஸ்தலனாகிய பவுல் குறிப்பிடுகிறார் ''.... நய வசனிப்பினாலும் இச்சகப் பேச்சி-னாலும், கபடில்லாதவர்களுடைய இருதயங்களை வஞ்சிக்கிறவர்-களாயிருக்கிறார்கள்'' (ரோமர் 16:18)

**2. மோசம் போவதற்கான சாத்தியங்கள் யாவை?**

ஒரு மனிதன் மோசம் போவதற்கான, அல்லது வஞ்சிக்கப் படத்தக்க, அல்லது ஏமாற்றப்படத்தக்க சாத்தியக்கூறுகளைப்பற்றி கலாத்தியர் 6ம் அதிகாரம் 7ம் வசனம் தெளிவாகப் போதிக்கிறது பழைய ஏற்பாட்டிலிருந்து பல சான்றுகளை பட்டியலிட்டுக்காட்ட முடியும். 1) ஏவாளை வஞ்சித்தசர்ப்பம் (ஆதி3),2) ரெபாக்காளும் அவளது குமாரன் யாக்கோபும் கூட்டுசேர்ந்து ஈசாக்கைஏமாற்றியது (ஆதி 27) ; 3) யோசேப்பின் சகோதரர்கள் அவருடைய தந்தையை வஞ்சித்தது (ஆதி37),இவ்வாறாக, வஞ்சிக்கப்படத்தக்க சாத்தியங்-நிறைய உண்டு என வேதாகமம் போதிக்கிறது.

**3. நாம் யாரால் வஞ்சிக்கப்படுகிறோம்?**

சக மனிதர்களால் ஒருவன் வஞ்சிக்கப்பட்டு, வழி தவறிப்

போகக் கூடும். கள்ளப் போதகர்களுக்கு எதிரான எச்சரிக்கை விடுகையில் கிறிஸ்து கூறினார்: ''கள்ளத் தீர்க்கதரிசிகளுக்கு எச்சரிக்கையாயிருங்கள்; அவர்கள் ஆட்டுத் தோலைப் போர்த்திக் கொண்டு உங்களிடத்தில் வருவார்கள்; உள்ளத்திலோ அவர்கள் பட்சிக்கிற ஓநாய்கள்'' (மத் 7:15). ''பிரியமானவர்களே, உலகத்தில் அநேகக் கள்ளத் தீர்க்கதரிசிகள் தோன்றியிருப்பதினால், நீங்கள் எல்லா ஆவிகளையும் நம்பாமல், அந்த ஆவிகள் தேவனால் உண்டானவைகளே என்று சோதித்தறியுங்கள்'' (1யோவான் 4:1) என கிறிஸ்துவின் எச்சரிப்பை யோவான் எதிரொலிக்கிறார்.

ஒருவன் தன்னைத் தானே வஞ்சித்துக் கொள்ளவும் கூடும். தன்னுடைய சொந்த அபிப்பிராயங்கள், உணர்வுகள், தப்பெண்ணங்கள் ஆகியவற்றால் பெரிதும் ஆளப்பட்டிருக்கக்கூடும். ''இதுவே சரி'' என தன் மனதில் தீர்மானித்துவிடும் குணம் படைத்த மனிதன், வேதாகமத்தின் அதிகாரத்தை அங்கீகரிக்கவோ, வேத வசனங்களைக் கேட்கவோ மறுத்து, தன் செவிகளை அடைத்துக்கொள்ளக் கூடும்.

## 4. வஞ்சிக்கப்படுவது எப்போது?

ஒருவன் கீழ்க்கண்டவாறு எண்ணும்போது மோசம் போகிறான்: 1) நல்லவனாக நடப்பதே இரட்சிப்புக்கு போதும் - கொர்நேலியு பற்றி படிக்கவும் (அப். 10 ம் அதிகாரம்). 2) அநியாயக்காரரும் மோட்சத்திற்குப் போகலாம் - 1 கொரி 6:9 வசனத்தைக் கவனியுங்கள். 3) தேவனை 'பரியாசம்' பண்ணினாலும் இரட்சிப்புக்குத் தடையில்லை - கலா. 6:7ம் வசனத்தைக் காண்க. 4) ஒன்றை விதைத்து வேறொன்றை அறுவடை செய்ய முடியும் - கலா 6;7,8 வசனங்களைப் படியுங்கள் 5) இரட்சிப்பின் திட்டத்தை அலட்சியப்படுத்தினாலும் இரட்சிப்படைய முடியும் - வசனத்தைக் கேட்பது, விசுவாசிப்பது, பாவங்களுக்காக மனஸ்தாபப்படுவது, கிறிஸ்துவை இரட்சகராக ஏற்று அவர் பெயரை அறிக்கையிடுவது, பாவ மன்னிப்புக்கென்று ஞானஸ்நானம் பெறுவது ஆகிய அனைத்துக் காரியங்களைப் பற்றியும் வேதாகமத்தைப் படித்து தெளிவு பெறுங்கள்.

## 5. நாம் வஞ்சிக்கப்படுவதிலிருந்து விடுபட வழி என்ன?

காரியங்கள் இப்படியிருக்கின்றனவா என தெளிவு பெற, சத்திய வசனங்களை எப்போதும் தொடர்ந்து படிக்க வேண்டும். (அப். 17:11) வேதாகமத்தை கருத்தோடும், ஜெபத்தோடும், தொடர்ந்தும் படிக்க வேண்டும், வசனங்களை சரியாகப் பகுத்துப் படிக்க வேண்டும் (2 தீமோ 2;15).

கலாத்திய சகோதரர்கள் ''வஞ்சிக்கப்படாதிருக்க'' அப்போஸ்தலன் பவுல் ஊக்கப்படுத்தினார். சாத்தானின் தந்திரங்களால் நாம் ஒருபோதும் வஞ்சிக்கப்படாதிருப்போம். எப்போதும் நிதான மனத்தோடும் எச்சரிக்கையாகவும் இருந்து, ''விசுவாசத்தின் நல்ல போராட்டத்தைப் போராடுவோம்''.

**ஹெரால்ட் பின்கம்** **தமிழில் : எஸ். எஸ். ராஜன்**

# வேதாகமம் விடுவிக்கும் எச்சரிக்கைகள்

காயீன், லோத்துவின் மனைவி, ஊசா ஆகிய பெயர்களெல்லாம் தேவனுடைய எச்சரிக்கைகளை நமக்கு நினைவூட்டுபவைகளாயிருக்கின்றன. தேவனுக்கு அவர்கள் கீழ்ப்படியாமல் போனதின் விளைவே இவர்கள் சீரழிவுக்குக் காரணம். அவைகள் நமக்குப் போதனைகளாகவும், எச்சரிப்புகளாகவும், எழுதப்பட்டிருக்கின்றன, **"தேவ வசனத்தினால் உண்டாகும் பொறுமையினாலும் ஆறுதலினாலும் நாம் நம்பிக்கையுள்ளவர்களாகும்படிக்கு முன்பு எழுதியிருக்கிறவைகளெல்லாம் நமக்குப் போதனையாக எழுதியிருக்கிறது"** என அப்போஸ்தவனாகிய பவுல் கூறினார். (ரோமர் 15:4)

தேவனுடைய கட்டளைகளின் படியே எல்லா காரியங்களையும் நாம் செய்ய வேண்டுமென காயீனுடைய வரலாறு நம்மை எச்சரிக்கிறது. (ஆதி 4:5,7); ரோமர் 10:17) சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படிந்து இரட்சிக்கப்பட்ட நாம் (ரோமர் 1:16; 1 பேதுரு 1-18,19), பாவ உலகைத் திரும்பிப் பார்க்கலாகாது. (லூக் 9:62) என லோத்துவுடைய மனைவியின் செயல் நம்மை எச்சரிக்கிறது. தேவனுடைய கட்டளைக்குக் கீழ்படிவதில் கவனக் குறைவை எந்த சூழ்நிலையிலும் சகித்துக் கொள்ள மாட்டார் (2 சாமுவேல் 6:1-7) என்ற கண்டிப்பான பாடத்தை ஊசாவின் காரியம் நமக்கு உணர்த்துகிறது. எல்லோரும் கற்றுக் கொள்ள வேண்டிய முக்கிய பாடங்களை மேற்சொன்ன மூன்று பேர் மூலமாக தேவன் நமக்குத் தந்திருக்கிறார்.

அதல்லாமல் பழைய ஏற்பாட்டில் காணும் வேறு மூன்று நபர்கள் வழியாக நாம் அடையும் எச்சரிக்கைகள் பற்றியும் இங்கு கவனிப்போம். அவர்களுடைய செயல்கள், கீழ்க்கண்ட எச்சரிக்கையை எல்லா மக்களுக்கும் எதிரொலித்துக் காட்டுகிறது:

> **"யெகோவாவின் ஆசீர்வாதமான வார்த்தையை மதித்து நட"**

நண்பர்களே! நோவா, சவுல் அரசன், நாதாப், அபியூ ஆகியோர் மூலம் நமக்கு விடுக்கப்பட்ட எச்சரிக்கைகளைப் பார்ப்போம்.

**"தேவனுடைய வார்த்தையோடு எதையும் சேர்க்காதே"** என்பது நோவா தரும் எச்சரிக்கை. **"விசுவாசத்தினால் உண்டாகும் நீதிக்கு சுதந்திரவாளி"** எனக் (எபி-11) குறிப்பிட்டுள்ள முதிர்வயதான நோவாவுக்கு, **"நீ கொப்பேர்**

மரத்தால் உனக்கு ஒரு பேழையை உண்டாக்கு'' என கட்டளையிடப்பட்டது. இந்த நீதியும் உத்தமனுமான மனிதனுக்கு (வசனம்9) பாதுகாப்பான அந்த பேழையைக் கட்ட வேண்டிய சரியான விதமும் அளவுகளும் கொடுக்கப்பட்டன. (வசனம் 14-16). தேவனுடைய கட்டளைக்குக் கீழ்ப்படிவதில் நோவா தேர்வு பெற்றாரா? இதோ வேதாகமம் தரும் பதில்; **''நோவா அப்படியே செய்தான்; தேவன் தனக்குக் கட்டளையிட்டபடியெல்லாம் அவன் செய்து முடித்தான்''** (வசனம்22). கொப்பேர் மரத்தால் ஒரு பேழையைக் கட்ட தேவன் கட்டளையிட்டபோது கொப்பேர் மரத்தோடு வேறு **மரத்தையும்** இணைத்தோ, அன்றி முற்றிலும் வேறுபட்ட ஒரு மரத்தையோ பயன்படுத்தி அந்த பேழையை கட்டியிருந்தால் தேவனுடைய 'கட்டளையை நோவா மீறியிருப்பார் அல்லவா? நமது வானகத் தந்தையின் யோசனையோடு தன்னுடையதையும் சேர்த்த குற்றத்தைப் புரிந்தவராயிருப்பாரே! நோவாவின் செயல் பற்றி இன்று மக்கள் கற்று, சிந்திக்க வேண்டியவர்களாயிருக்கின்றனர். உதாரணமாக ஆராதனையில் வாத்திய இசைக்கருவிகளை உபயோகிப்பது புதிய ஏற்பாட்டுப் பிரமாணங்களில் சொல்லப் படவில்லை. நமது இருதயத்திலிருந்து கர்த்தரைப் பாடவேண்டுமென புதிய ஏற்பாடு கற்பிக்கிறது. (எபே. 5:19; கொலே 3:17) இயேசுவின் அன்பிற்குப் பாத்திரமான அப்போஸ்தலன் யோவான் பரிசுத்த ஆவியானவரால் ஏவப்பட்டு, கீழ்க்கண்டவாறு எச்சரிக்கிறார். ''.... ஒருவன் இவைகளோடே எதையாகிலும் கூட்டினால், இந்த புஸ்தகத்தில் எழுதியிருக்கிற வாதைகளைத் தேவன் அவன் மேல் கூட்டுவார்'' (வெளி. 22:18) ஆம், நோவா திட்டவட்டமாக நமக்குத் தெரியப்படுத்தும் செய்தி: ''தேவனுடைய கட்டளையை கூட்டாமல் மாற்றாமல் அப்படியே கைக்கொள்ள வேண்டும்'' என்பதாகும்.

தேவனுடைய வார்த்தையிலிருந்து எதையாவது குறைப்பதோ, திருத்துவதோ, குற்றம். இதை நமக்கு உணர்த்த, தேவன் சவுல் அரசன் மூலமாக ஒரு மிகப்பெரிய எச்சரிக்கையை விடுக்கிறார். அந்த இஸ்ரவேலரின் அரசனிடம் ''இப்போதும் நீ போய், அமலேக்கை மடங்கடித்து, அவனுக்கு உண்டான எல்லாவற்றையும் சங்கரித்து, அவன் மேல் இரக்கம் வைக்காமல், புருஷரையும் ஸ்திரீகளையும், பிள்ளைகளையும், குழந்தைகளையும் மாடுகளையும், ஆடுகளையும், ஒட்டகங்களையும், கழுதைகளையும் கொன்று போடக் கடவாய்'' என சாமுவேல் மூலமாகக் கட்டளையிடப்பட்டது. (சாமு. 15:3) ''முற்றிலுமாக அழித்துப் போடும்படி சவுல் அசரனுக்கு கட்டளையிடப்பட்டது! ஆனாலும், பரிசுத்த வேதாகமம் கூறுகிறது: ''சவுலும் ஜனங்களும் ஆகாகையும், ஆடு

மாடுகளில் முதல் தரமானவைகளையும், இரண்டாந்தரமானவை-களையும் ஆட்டுக் குட்டிகளையும், நலமான எல்லாவற்றையும், அழித்துப் போட மனதில்லாமல் தப்ப வைத்து, அற்பமானவை-களும் உதவாதவைகளுமான சகல வஸ்துக்களையும் முற்றிலும் அழித்துப் போட்டார்கள்'' என்று வேதாகமத்தில் நாம் வாசிக்-கிறோம். (சாமு. 15.9) ஆகாகையும் பிற பொருட்களையும் தப்ப வைத்ததின் மூலம் சவுல் தேவனுடைய வார்த்தைக்கு முற்றிலு-மாகக் கீழ்ப்படியவில்லை. ''சகலவற்றையும் அழிக்க''ச் சொன்ன தேவனுடைய கட்டளையிலிருந்து ஒரு பகுதியை அவன் எடுத்து போட்டதாக முதிர் வயதான தீர்க்கதரிசி சாமுவேல், சவுல் அர-சனைக் கண்டித்து ''கர்த்தருடைய சத்தத்திற்குக் கீழ்ப்படிகிற-தைப் பார்க்கிலும், சர்வாங்க தகனங்களும் பலிகளும் கர்த்தருக்குப் பிரியமாயிருக்குமோ? பலியைப் பார்க்கிலும் கீழ்ப்படிதலும், ஆட்டுக்கடாக்களின் நிணத்தைப் பார்க்கிலும் செவி கொடுத்தலும் உத்தமம்'' (வசனம் 22) எனக் கூறுகிறார். எனவே, தேவனு-டைய கட்டளையை அவசியம் செய்து, தன் இஷ்டம் போல் செய்த சவுலுக்கு நேர்ந்த கதி நமக்கு விடுக்கும் பலத்த எச்சரிக்-கை. (சாமு 15:23) ஆகவே, நண்பனே ''தேவனுடைய கட்டளை-களிலிருந்து எதையும் எடுத்துப் போடாதே''.

சவுலைப் போல, யெகோவாவின் சட்டத்திலிருந்து எதை-யாவது எடுத்துப் போடும் குற்றத்தை, இன்று பல சந்தர்ப்பங்-களில் மக்கள் செய்து வருகிறார்கள். கர்த்தரின் பந்தி பற்றிய ஆலோசனையை சிலர் தங்கள் மனம் போல மாற்றிக் கொள்கின்-றனர். வாரத்தின் முதல் நாளிலே கர்த்தரின் நினைவாகப் பங்கு பெறுவதை விடுத்து (அப். 20:7), சிலர் 3 மாதங்களுக்கு ஒரு முறை அல்லது வருடத்தில் ஒன்று, இரண்டு முறை மட்டுமே கர்த்தரின் பந்தியில் பங்கு பெற்றால் போதுமென்கின்றனர்! இத்தகைய குற்றம் புரிவோருக்கு ''ஆக்கினை'' காத்திருக்கிறது. யோவான்கூறுகிறார்: ''ஒருவன் இந்தத் தீர்க்கதரிசன புஸ்தகத்தின் வசனங்களிலிருந்து ஏதையாகிலும் எடுத்துப் போட்டால், ஜீவ புஸ்தகத்திலிருந்தும், பரிசுத்த நகரத்திலிருந்தும், இந்த புஸ்தகத்தில் எழுதப்பட்டவை-களிலிருந்தும், அவனுடைய பங்கைத் தேவன் எடுத்துப்போடுவார்''. (வெளி. 22:14)

தேவனுடைய கட்டளைக்கு மாறாக நடந்து கொண்ட நாதாப், அபியூ ஆகியோரின் செயல் தேவனுடைய எச்சரிப்பை மீறுவதால் ஏற்படும் அபாயத்தை படம் பிடித்துக் காட்டுகிறது. முதல் பிரதான ஆசாரியன் என்ற பேறு பெற்ற ஆரோனுடைய இம்மக்கள், ''கர்த்தர் தங்களுக்குக் கட்டளையிடாத அந்நிய ஆக்-

கினியை அவருடைய சந்நதியில் கொண்டு வந்தார்கள்'' (லேவி: 10:1). நாதாபும், அபியூம் தங்களுக்கு கட்டளையிட்டபடி நடவாமல் (வசனம் 10) தேவன் கட்டளையிடாத ''அந்நிய அக்கினியை'' பயன்படுத்தினார்கள். அவர்களுடைய கீழ்ப்படியாமைக்குக்கிடைத்த பரிசு மரணம்! ''அப்பொழுது அக்கினி கர்த்தருடைய சந்நிதியிலிருந்து புறப்பட்டு, அவர்களைப் பட்சித்தது:அவர்கள் கர்த்தருடைய சந்நிதியில் செத்தார்கள்'' (வசனம் 2).

இன்றும் சிலர் இந்த கீழ்ப்படியாத ஆரோனின் மக்களுக்கு ''வாரிசாக'' செயல்படுகின்றனர்! முழுக்குதலுக்குப் பதிலாக தெளிப்பதையும் ஊற்றுவதையும் சிலர் திருமுழுக்காட்டுவதற்கு மாற்று முறையாகக் கையாளுகின்றனர். தெளித்தோ அல்லது ஊற்றியோ ஞானஸ்நானம் கொடுக்க வேதாகமம் எந்த ஒரு இடத்திலும் சொல்லவில்லை! மாறாக, நமது தேவனோடு ஞானஸ்நானத்தில் அடக்கம் செய்யப்பட அதிகாரமும், கட்டளையும் கொடுக்கப்பட்டுள்ளது. (ரோமர் 6: 3-4, அப். 10:48).

சகோதரனே, சகோதரியே! நோவா, சவுல், அரசன், நாதாப் அபியூ ஆகிய அனைவரும் தேவனுடைய வார்த்தைக்கு மதிப்பு கொடுக்க வேண்டுமென்பதையும் கொடுக்கத் தவறினால் இழப்புகளும் வியாதிகளும் நேரிடும் என்றும் தேவனுடைய நித்திய வசனத்துடன் நாம் எதையுமே (1) கூட்டவோ, (2) குறைக்கவோ, அல்லது (3) மாற்றவோ கூடாதென்றும் அவர்கள் நம்மை எச்சரிக்கின்றனர். உண்மையாகவே, இந்த பலத்த எச்சரிக்கைகள் வேதாகமம் இன்றைக்கு வாழ்ந்து கொண்டிருக்கும் நமக்கு விடுப்பவைகளாகும் (1 கொரி. 10:6) என்றும் ''இவற்றை நாம் நினைவில் கொள்வோம்! இப்புதிய ஆண்டில் நம் சிந்தனையோட்டத்தை மாற்றிக் கொள்வோமா!

**ஹோவெல் பிக்காம்** **எஸ். எஸ். ராஜன்**

## புதிய வாழ்க்கை

ஒருவன் கிறிஸ்துவோடு இணைக்கப்படும் போது அவன் ஒரு புதிய படைப்பு ஆகிவிட்டான்; பழைய வாழ்க்கை முடிந்து விட்டது; புதிய வாழ்க்கை தொடங்கிவிட்டது. 2 கொரிந்தியர் 5:17.

இயேசு, ''நானோ, என் ஆடுகள் என்றுமுள்ள மெய் வாழ்வைப் பெறும் பொருட்டும், அதை முழு நிறைவாகப் பெரும் பொருட்டும் வந்திருக்கிறேன்'' என்றார். யோவான் 10-10

# நீங்கள் கிறிஸ்துவின் சபையில் அங்கம் வகிக்க வேண்டியது அவசியம் என்பதற்கு 10 காரணங்கள்

1. பரிசுத்த வேதாகமத்தின் உபதேசங்களைத் தவிர கிறிஸ்துவின் சபைக்கென்று சிறப்புக்கொள்கைகள் எதுவும் கிடையாது.

அ. வேதவசனங்கள் உபதேசத்துக்கும், கடிந்து கொள்ளுதலுக்கும், சீர்திருத்தலுக்கும், நீதியைப் படிப்பித்தலுக்கும் போதுமானவைகள். 2தீமோ 3:16,17. வாழ்க்கைக்கும் தேவபக்திக்கும் தேவையான யாவற்றையும் தேவனுடைய வசனம் நமக்குத் தருகிறது. 2 பேதுரு 1:3

ஆ. புதிய ஏற்பாட்டு உபதேசச் சட்டங்களே அப்போஸ்தலருடைய கொள்கை விளக்க ஏடாகும்.

இ. புதிய ஏற்பாட்டுசபைகள் அன்றைக்கு மனிதனுடைய கோட்பாடுகளின்றி இயங்கமுடிந்தது என்றால் இன்றைக்கும் அது சாத்தியமே.

2. வேதாகமம் விளம்புவதை விவரித்துச் சொல்வோம், வேதாகமம் விளம்பாததற்கு உடன்படவேமாட்டோம்'' என்ற நிலையில் உறுதியாக உள்ளது.

அ. ஒருவன் போதித்தால் வேதவாக்கியங்களின்படி போதிக்க வேண்டும். 1பேது 4:11

வேதவசனங்களோடு எதையும் கூட்டவும் கூடாது; எதையும் எடுத்துப் போடவும் கூடாது. வெளி 22:18,19.

அப்போஸ்தலர் உபதேசிக்காத எதையும் கிறிஸ்துவின் சபை போதிக்காது. கலா 1:6-9.

ஆ. முழுசத்தியத்தை தேவனுடைய ஆலோசனைகள் எல்லாவற்றையும் போதிக்கவேண்டும். அப் 20:20,26; யாக் 2:10.

இ. கிறிஸ்துவின் உபதேசத்துக்கு மீறிப் போதிக்கக் கூடாது. 2யோ 9-11.

3. எல்லா விசுவாசிகளின் ஐக்கியத்தையும் கிறிஸ்துவின் சபை வாஞ்சிக்கிறது. ஆனால் சத்தியத்தின்படி ''ஒரே சரீரம்'' என்ற நிலையை வற்புறுத்துகிறது.

அ. தம்மைப் பின்பற்றுபவர்கள் யாவரும் ஒன்றாக இருக்க வேண்டுமென்று இயேசு ஜெபித்தார். யோ 17:20,21.

ஆ. ஒரே காரியத்தைப் பேசவேண்டும் என்று பவுல் மன்றாடினார். 1கொரி 1:10, கிறிஸ்துவுக்கு ஒரேசரீரம்தான். அந்த சரீரம் சபையே எபேசி 4:4-7. கொலே 1:18; எபே 1:22,23.

இ. கிறிஸ்துவின் சபை பிரிவினையற்றது. மனிதரால் ஏற்படுத்தப்பட்ட எந்த இயக்கத்திலும் அங்கம் வகிக்காது.

ஈ. இரட்சிக்கப்பட்டவர்களை தேவன் சேர்க்கிறதான சபையை அன்றி வேறொரு சபையை அங்கீகரிக்காது அப் 2:47.

4. கிறிஸ்துவின் சபை ஆராதனை ஒழுங்குகள் புதிய ஏற்பாட்டு ஆதி சபைகளில் காணப்பட்ட ஆராதனை முறைகளுக்கு இசைவாகவே இருக்கிறது.

அ. ''ஆவியோடும்'' அதாவது உற்சாக மனதோடும் "உண்மையோடும்'' சத்தியவசனம் கூறுகிறபடி. யோவான் 4:24.

ஆ. புதிய ஏற்பாட்டு ஆதிசபைகள் ஏற்றுக்கொள்ளாத எந்த வழிபாட்டு முறைகளையும் இது எதிர்க்கிறது. புதிய ஏற்பாடு ஏற்றுக்கொள்ளாத எந்த வழிபாடும் வீண் ஆராதனையே. மத் 15;9. அப்போஸ்தலருடைய உபதேசத்தில் உறுதியாய்த் தரித்திருக்கிறது. அப் 2:42.

இ. ஆதிசபைகளின் வழிபாட்டில் காணப்பட்ட அம்சங்கள் :-
பாட்டுப்பாடுதல்: எபே 5:19, கொலே 3:16
கிறிஸ்தவ ஈகை: 1 கொரி 16:1,2; 2கொரி 9:7
பிரசங்கம்: அப் 20:7
கர்த்தருடைய பந்தி அப் 20:7; அப் 2:42
ஜெபம்: 2:42

ஒவ்வொரு வாரமும், முதல்நாள்தோறும் 1கொரி 16:1,2 & அப் 20:7

5. கிறிஸ்துவின் சபை அதன் முழுஉரிமையாளரான கிறிஸ்துவின் பெயரைத் தவிர, மனிதர்களால் சூட்டப்படுகிற எந்தப் பெயரையும் ஏற்காது.

அ. அந்தியோகியாவில் முதன்முறையாக கிறிஸ்தவர்கள் என்று அழைக்கப்பட்டனர். அதுவே இன்றைக்கும் ஏற்றுக்கொள்ள வேண்டிய பெயராகும். அப் 11:26 இதே பெயர் தொடர்ந்து அப் 26:28 பேதுரு 4:16 ஆகிய வசனங்களிலும் கூறப்பட்டிருப்பதைக் கவனிக்கவும்.

ஆ. ஆகவே கிறிஸ்தவர்கள் அனைவரும் தங்களை அவ்வாறே அழைத்துக்கொள்ளவேண்டும். கத்தோலிக், லுத்தரன், மெதடிஸ்ட், பேப்டிஸ்ட் என்றெல்லாம் தங்களைப் பிரித்துப் பேசுவது கூடாது.

இ. மனிதர்களுடைய பெயர்களை சபைக்குச் சூட்டுவதை வேதாகமம் வன்மையாகக் கண்டிக்கிறது. 1 கொரி 1-ம் அதிகாரம் காண்க.

6. ஒவ்வொரு சபையிலும் ஒன்றுக்கு மேற்பட்ட மூப்பர்கள் (Elders or Bishops) உதவிக்காரர்கள் (Deacons) இருக்கவேண்டும் என்கிற அப்போஸ்தலருடைய நிர்வாக முறையுடையது கிறிஸ்துவின் சபை.

அ. சபையை மேய்ப்பதற்கு... கண்காணிகள். அப் 20:28 அந்த சபைகளில்...மூப்பர்களை.. (ஆங்கிலத்தில் Elders in everychurch) என்று தெளிவாகக் கூறப்பட்டுள்ளது. அப் 14:23, நன்றாய் விசாரணை செய்கிற மூப்பர்களை.. 1 தீமோ 5:17 உங்களிலுள்ள மூப்பர்களுக்கு .. 1 பேதுரு 5:1 (பன்மை)

ஆ. பெரும்பான்மை பலத்தினாலோ, (Majority) போப் என்பவராலோ, கமிட்டிகள், குழுக்கள் போன்ற அமைப்புகளாலோ ஆளப்படாமல், அதன் தலையாகிய கிறிஸ்துவானவர் ஆணையிட, அக்கட்டளைகளை அப்போஸ்தலர்கள் மற்றும் மூப்பர்களால் எவ்வித மாற்றமும் செய்யப்படாமல் நிறைவேற்றப் பட்டது. அதையே இன்றும் பின்பற்றவேண்டும்.

6. பாவிகளை மனந்திரும்பச் செய்து இரட்சிப்புக்குள் நடத்த, பரிசுத்த ஆவியானவரால் வெளிப்படுத்தப்பட்டு உறுதி செய்யப் பட்ட அருட்செய்தியே போதுமானது எனப்போதிக்கிறது.

அ. இரட்சிக்கப்படுவதற்கு அருட்செய்தியே (சுவிசேஷமே) தேவ-பெலனாயிருக்கிறது ரோமர் 1:16.

சுவிசேஷத்தினாலே நாம் இரட்சிக்கப்படுகிறோம் 1கொரி15:2 அருட்செய்தியினால் ஈன்றெடுக்கப்பட்டோம் 1 கொரி 4:15 சத்திய வசனத்தினாலே ஈன்றெடுக்கப்பட்டோம் யாக் 1:18 தேவனுடைய வசனத்தை கேட்பதின் மூலமாக விசுவாசம் வருகிறது. ரோமர் 10:17. சத்திய வசனத்தினாலே நாம் சுத்திகரிக்கப்பட்டோம். யோவான் 17:17.

ஆ. சுவிசேஷ வசனம் அறிவிக்கப்படாமல் எந்தப் பாவியையும் தேவன் பரிசுத்த ஆவியானவரைக் கொண்டு நேரடியாக அற்புத விதமாய் மனமாற்றம் அடையச் செய்வதில்லை. விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றாலே ஒருவன் இரட்சிக்கப்படுவான் என்று வேதம் விளம்புவதை சிந்தனை செய்து பார்க்கவும்.

மாற்கு 16:16.

8. சபையின் ஆராதனை ஒழுங்கு நிர்வாக முறை ஆகிய யாவுமே சபையின் மூலமாகவே செய்யப்படுகின்றன. தனிப்பட்ட குழு அல்ல. வேறு அமைப்புகளின் மூலமாக அல்ல.

..அநந்த ஞானமானது சபையின் மூலமாய் .. எபே 3:10. சபையே சத்தியத்துக்குத் தூணும் ஆதாரமும் 1 தீமோ 3:15. இயேசு கிறிஸ்துவே சபையைக் கட்டினார். அது அவருக்கே சொந்தம், மத் 16:18.

9. அப்போஸ்தலர்கள் காலத்தில் இரட்சிக்கப்படுவதற்கு எந்த உபதேசச் சட்டங்கள் போதுமானவைகளாக இருந்தனவோ அவைகளே இன்றைக்கும் போதுமானவை என்று நம்புகிறது.

அ. ஒருவன் விசுவாசிக்க வேண்டும். ரோமர் 10:17; அப் 16:31

ஆ. மனந்திரும்ப வேண்டும். அப் 3:19; அப் 17:30; லூக் 13:3

இ. அறிக்கையிட வேண்டும். ரோமர் மத் 10:32;10:9,10

ஈ. ஞானஸ்நானம் பெற வேண்டும்.
மாற்கு 16:16; அப் 2:38; 22:16; பேது 3:21.

10. இப்படியாக கிறிஸ்தவர்கள் (மேற்சொன்ன வழிகளைப் பின்பற்றி இரட்சிக்கப்பட்ட மனிதன்) சபையின் தலைமையாகிய கிறிஸ்துவுக்கு உண்மையுள்ளவர்களாய் நடந்து கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் அவர்கள் இடறிவிழுந்து இரட்சிப்பை இழந்து விடுவார்கள்.

அ. கனிகொடாத கொடிகள் அக்கினியிலே போடப்படும். யோவான் 15:1-8.

இ. இவைகளைக் கைக்கொண்டு நடந்தால் நீங்கள் விழுவதில்லை. 2 பேது 1:5-11.

இ. உண்மையாய் நடந்துகொள்பவர்களுக்கு ஜீவகிரீடம் வைக்கப் பட்டிருக்கிறது. வெளி 2:10.

ஈ. அநியாயக்காரர்கள் தேவனுடைய இராஜ்யத்தைச் சுதந்தரிப்பதில்லை. 1 கொரி 6-9.

R. டீன் கிரட்ச் பீல்டு

YOUR ATTENTION PLEASE !

# Radio Sri Lanka Broadcasts

**ENGLISH** The voice of Truth—Speakers: Reggie Gnanasundaram, J. C. Choate, John Stacy.
The Voice of Truth, Post Box 3815, New Delhi- 110049
Mondays-9: 00 to 9: 5 P. M.
Fridays - 7:45 to 8: 00 P. M.

**HINDI** Satya Susasamachar-Speaker : Sunny David.
Satya Susasamachar, Post Box 3815, New Delhi- 110049
Thursdays-9: 00 to 9-15 P. M.
Fridyas-- 9: 00 to 9:15 P. M.
Tuesdays-9 00 to 9:5 P. M.
Sundays-1 2 45 to 1: 00 P. M.

**TELUGU** The voice of Truth-Speaker: Joshua Gootam
The Voice of Truth, Post Box 80, Kakinada 533001.
Sundays-2.15 to 2:30 P. M.
Tuesdays-2:15 to 2:30 P. M.
Thursdays-2:15 to 2:30 P. M.
Fridays -2:15 to 2:30 P. M.
Saturdays-2:15 to 2:30 P. M.

**TAMIL** The Way of Truth-Speaker : P. R. Swamy.
The way of Truth, Post Box 8405, Bangalore 560084
Tuesdays-5:30 to 5:45 P.M.
Thursdays-6:45 to 7:00 P.M.
Sundays-6:45 to 7:00 P. M.

**MALAYALAM** The Voice of Truth-Speaker: P. K. Varghese
Church of Christ Sunny Meads Lane Trivandrum-34 (Kerala)
Tuesdays-3:45 to 4:00 P.M.
Fridays-3:45 to 4:00 P.M.

**KANNADA** The Voice of Truth-Speaker : Robert Rathnakar
Box No 448, Bangalore 560004
Sundays-1:45 to 2:00 P. M.

## ALL ARE ENCOURAGED TO LISTEN

Bible Correspondence Courses and Christian Literature are avilable in these different languages from the addresses listed Also the radio sermons are available in book form.

## தவணைக் காலம் முடிந்து விட்டது

### வாசக அன்பர்களே, புத்தாண்டு வாழ்த்துக்கள்

கடந்த ஆண்டு முழுவதும் மாவட்ட வாரியாக முகவரிகளை ஒழுங்குபடுத்தும் வேலைக்கு ஒத்துழைப்புத் தரும்படி விடுத்த வேண்டுகோளை மதித்து ஒத்துழைப்புத் தந்த அனைவருக்கும் நன்றி மற்றவர்களுக்கு இதழ் வராவிட்டால் உங்கள் முகவரி எங்களுக்குக் கிடைக்கவில்லை என்று பொருள். ஆயினும், விரும்பிக் கேட்டால் இதழ் அனுப்பித் தருவோம்.

ஆசிரியர்

Published by Church of Christ and Printed at Jeevasakthi Press
Erode-638 003.

Editor. E.Z. Selvanayagam.

PRINTED MATTER BOOK-POST

TO

If undelivered please return to:
The Editor
THIRUMARAI AASAAN
Post Box No: 58 ERODE-638 001.